

தம்பலகாமம் வர்ணமேட்டுத்திடலைச் சேர்ந்த

# அமரர். சிதம்பரம் கணபதிப்பிள்ளை

அவர்களின்

## 31ம் நாள் சிதம்பர தீபம்

21.01.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவுமலர்



மலர்வு
26.08.1930

உதிர்வு
22.12.2015

## அமரர். சிதம்பரம் கணபதிப்பிள்ளை

### திதி நிர்ணயம்

சிந்தை நிறை மன்மத வருட சிறந்தமதி மார்கழியில்
வந்த திதி துவாதசி வளர் பிறையில் சந்ததி சூழ்
சிதம்புரமெனும் தெய்வ நங்கை புவி நீத்து
ஆதி கோணநாதர் அடி இணைந்தார் இனிதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வையத்துள் வாழ் வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
என்ற வள்ளுவன் வாய் மொழிக்கிணங்க
பெரியோர் சிறியோர் என்ற பேதம் இன்றி
நேர்மை, நிதானம் கடைப்பிடித்து
கௌரவமாக வாழ்ந்து எம்மை அன்பு, பாசம் காட்டி
வளர்த்து ஆலோசனைகள் கூறி நல்ல
ஸ்தானத்தில் எம்மை உயர்த்தி
ஆளாத்துயரில் ஆழ்த்தி பிரிந்து சென்ற எமது
குடும்பத்தலைவி

**அமரர். சிதம்பரம் கணபதிப்பிள்ளை**

அவர்களின்
பாதக் கமலங்களுக்கு
இம் மலரை சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்ச புராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கைகூடும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை

### தேவாரம்

எல்லா உலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ் சேவடியென்மேல் வைத்தாய் நீயே
செவ்வாய் செல்வம் தருவாய் நீயே
திருவையாறகலாத செம்பொற் சோதி

### திருவாசகம்

மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
ஊறிநின்றென்னுள் எழுபரஞ்சோதி
உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப் பெருந்துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங்கடந்த
இன்பமே என்னுடை அன்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள் வீற்றிருந்த
அங்கணா போற்றி அமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கள் நான் மறைநூல் சகலமுங்கற்றோர்
சாட்டியக் குடியிருந்தருளும்
எங்கள் நாயகனே போற்றியே யிருக்கை
இறைவனே போற்றியே போற்றி

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில
தேவர் சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் - உன்னை
என்றும் மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி அறவாநீ ஆடும் போதுன் அடியின் கீழ்
இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

அபசார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
யுனை நானினைந்தருள் பெறுவேனோ
இபமா முகன்றனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவினன் குடிப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வாழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவமயம்
## குமரகுருபர சுவாமிகள்
## அருளிச் செய்த
# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனற் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே. 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே. 3

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே. 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே. 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய் சகல கலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே. 7

சொல்விற் பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே. 8

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே சகல கலாவல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ சகல கலாவல்லியே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்



காப்பு நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்
நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்
கதித்தோங்கும் நிஷ்டையுங் கைகூடும்
நிமலரருள் கந்த சஷ்ஷ கவசந்தனை

குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணியாட
மையல் நடனஞ் செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருக மருக வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிறிகரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்லங்க
விரைந்தென்னைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியும் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந்த தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செகண செகண செகண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
றுண்டிரு வடியை உறுதியென் றென்னும்
என்றனை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேலிரண்டும் கண்ணினை காக்க
விழிசெவி யிரண்டும் வேலர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனை பெருவேல் காக்க
முப்பந் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளாங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறியிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் யெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படு மன்னரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட்டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கைகால் முறியக்
கட்டுக் கட்டுக் கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுத்துய ராங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருக அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால் குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன், ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றி யிலணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன் பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக நிங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவள் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடனே அங்கந் துலக்கி
நேச முடனோரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய
அக்ஷ்டத்திக் குள்ளொர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் களுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்வெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
விழியாய்க் காண மெய்யாய் விங்கும்
வியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லாதவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நிலைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அக்ஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணிந்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள்ள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெற்றி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சரைக்கோ ரரசே
மயில்நட மிடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரஹண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேச்சரப் பதிகம்

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகற் பிளவும்
அளப்பெருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியென நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ள முன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடைமுடி யிடைவைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகம்
ஆகமுன் கலந்தவர் மதில்மேல்
தனித்தபே ருருவ விழித் தழல்நாகம்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன்தேவி வேண்ட முன்கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல் தரளஞ்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கடையிடைச் - சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றி சைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

பரிந்து நன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்த வற்கருளுஞ்
செம்மையார் நம்மையாளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருத்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லைக் கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே

எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம் ஒள் எரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்குலம்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே

நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறி லாதன புறங்கூற
வென்றுநஞ் சுண்ணும் பிரிசினர் ஒரு பால்
மெல்லிய லொடும் உடனாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபலமோதிக்
குன்று மொன்கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந்தாரே

குற்றம் இலாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞான சம்பந்தன்
உற்ற செந்தமிழ் ஆர்மாலை ஈரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமும் ஆகித் ,தொல்வினை அடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் சரிதம்

விண்ணுலகு வந்து பூமியிலே
விரைந்து படிந்தது போலே
பச்சை வயல் வெளிகள் எங்கும்
பாய்ந்து வரும் நீரோடை சலசலக்க
பனையானுடன் விராலும் துள்ளிக்குதிக்க
தளரா வளர் தெங்கு தலையசைத்தே நிற்க
செந் நெல்லும் செழுங்கனியும் தீம்பாலும் தரும்
ஆதி கோண நாதர் அருள் பெருகும்
தம்பலத்தால் நல்ல கமம் செய்யும்
மருத நில தம்பலகாமப் பதியில்
வர்ணமேட்டுத் திடல் தனிலே
பார் போற்றும் வண்ணமாய்
ஊனம் நீங்கிய ஆவணித்திங்கள்
ஆயிரத்து தொளாயிரத்து அகவை முப்பதில்
காத்தமுத்து பசுபதிப் பிள்ளை தம்பதியர்
செய் தவத்தால் சிதம்பரம் எனும் நல்லாள்
வந்துதித்தார் இனிதாய் இம் மண்ணில்
சிறுவயதில் சிதம்பரம் சென்று
சிதம்பரம் என்னும் நாமத்தைப் பெற்றார்
உடன் பிறப்பாய் வள்ளிப் பிள்ளையுடன்
அமரர். தெய்வானைப்பிள்ளையும்
முப்பெருந்தேவிகளாய் இணைந்தனரே
பரம்பரைச் செல்வமும் வளர்ந்துவரவே
தந்தையின் வைத்தியமும் வருவாய்தரவே
மூவரும் இணைந்தே மகிழ்வு கண்டனா
பள்ளிப் பருவமும் தேடி வரவே
பாங்குடனே மகிழ்ந்தே பெற்றோர்
அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில்
பண்புடனே அறிவையும் சீராய்பெறவே
தினம் தினம் அனுப்பியே பெருமை கண்டனர்
செல்வச் செழிப்புத் தொடர்ந்து வரவே
கல்வியை நிறுத்தியே வீட்டுப் பணியை
சீராய்ச் செய்திட பயிற்சியும் பெற்றார்
உற்றார் உறவினைப் பேணியே நாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலைக் குமரியாய் வளர்ந்து நின்றார்
இளமையும் செல்வமும் வளர்ந்து வரவே
திருமண வயதை நெருங்கி நின்றார்
கொடையில் கர்ணனாய்
குடும்பத்தின் கண்ணனாய்
ஊருக்கு மன்னனாய்
உழைப்பிலே விண்ணனாய்
உனக்கு ஒரு காவலனாய்
தாய்மாமன் கனகசபை தங்கம்மா
செய்தவத்தால் ஈன்றெடுத்த
விதானையார் கணபதிப்பிள்ளை என்ற இரத்தினத்தை
இருவீட்டார் ஒப்புதலுடனே
உற்றோரும் மற்றோரும் வியக்கும் வண்ணம்
திருக்கரம் பற்றினார் அம்மை
இல்லறவாழ்வு சிறந்து விளங்கவே
கணவனின் மனதில் குறைவேதுமின்றி
செல்வமும் அன்பும் நிலைத்து நின்றிட
நன் மனையாளாகி இல்லறம் காத்தார்
குலம் விளங்கும் வண்ணமாய்
சமயேஸ்வரியை தலைமகளாகவும்
கமலாதேவியை நன்மகளாகவும்
ஆசை மகனாய் அரியநாயகம் உடன்
இளைய உழைப்பு மகனாய் சண்முகசுந்தரமும்
ஆசைக் கடைக்குட்டியாய் விஜயலட்சுமியும்
நல்ல மக்களாய் வந்து பிறந்தனர்
வாழும் வயதில் கணவனை இழந்தார்
மாமன், மைத்துனர் உதவியுடன்
கல்வியில் மக்களை உயர்த்திட எண்ணி
சமயேஸ்வரியை நல்ல ஆசிரியை ஆக்கி
அன்பு மருமகன் திலகரெட்ணத்தை
திருமணம் செய்தே உயர்த்தியே வைத்தார்
கமலாதேவியை வில்வராசாவுக்கும்
அறிவு மகனாம் அரியநாயகத்தை
பத்மலோஜினிக்கும் திருமணம் செய்தே வைத்தார்
கடைசி மகனாம் சண்முக சுந்தரத்தை
மஞ்சுளாவுக்கும் மணம் செய்து வைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைமகளாம் விஜயலட்சுமியை
காலம் பார்த்து வாழ்வு கொடுத்தார்
நல்ல மக்களையும் மருமக்களையும்
திருமலை போற்றும் கல்வியியலாளராக்கினார்
மக்களின் பிள்ளைகள் கல்வியில் உயர
கேட்டுக் கொண்டே ஆனந்தம் கொள்வார்
கணவனின் கனவு நனவாகும் வண்ணம்
பேரப் பிள்ளைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாய்
வைக்கீலாய், வைத்தியராய், பொறியியலாளர்களாய்
வங்கியியலாளராய் நிர்வாக சேவை அதிகாரியாய்
தொழில்நுட்பவியலாளர்களாய்
சிறந்து விளங்குவதை ஊரார் சொல்கேட்டு
பெருமிதம் கொள்வார்.
விருந்தோம்பலில் சிறந்து நின்றே
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர் என்பதற்கேற்ப
இறுதிவரை உணவளித்தார்
மண்ணைப் பிரிய மனமின்றியே
சுற்றி நின்று உறவினைக் காத்தார்
பூட்டக் குழந்தைகளின் மழலைமொழி கேட்டு
ஆனந்த முடனே அணைத்துக்கொள்வார்
தெய்வம் போற்றி கணவனின் நினைவுடன்
குறைகளின்றி வாழ்ந்துவரும் வேளை
தங்கையின் மருமகனின் இறப்பைக்கண்டு
சித்தம் கலங்கி சில நொடி வாடினார்
மார்கழித் திங்கள் மதி நிறை நன்னாளிலே
தெய்வம் விரும்பிய மாலைப் பொழுதிலே
காண்டா மணியும் கணீர் என ஒலிக்க
மகள் தங்கையுடன் உரையாடியபடியே
கதிரையில் அமர்ந்தே சங்கரன் காலடியைச் சேர்ந்தார்
இறப்பை உளரார் மெச்சும் படியாய்
உற்றாரும் ஊராரும் கலங்கி நிற்க
மண்ணுலக வாழ்வை முடித்துக்கொண்டார்
உரையாடிய கிளி பேச்சிழந்தது
உட்கார்ந்த வேளை மூச்சு இழந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரி புலம்பல் . . .

கணவனை இழந்து நான் கலங்கிய வேளை

எனக்குப் பலமாய் நீ இருந்தாயக்கா

நான் தனியனாய் நோயுற்ற வேளை

உன் விருட்சங்களின் வித்துக்களும்

எனக்கு விருந்தளித்தன அக்கா

எமன் வந்து அழைத்த வேளையிலும் கூட

என் அருகே வந்து உயிர்விட்டாய்

எங்கே நான் மறப்பேன் உன் இறப்பை

நான் எங்கு சென்றாலும் என்னுடன்

கூடவே வருவாயக்கா

என்னுடன் கூட இருந்து கதைத்த நாள்

இனி வருமோ அக்கா

நானோர் உடை உடுத்தால் அது போலவே உடுப்பாய்

இரட்டையராய் இருந்த எம்மைக்

காலன் பிரித்துவிட்டானே அக்கா

அர்ச்சிக்கின்றேன் மலர்தூவி உன் ஆத்மா சாந்தி பெற

சகோதரி

வள்ளிப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறக்க முடியவில்லை தாயே...

இளமைக் கால நினைவுகளை
இன்றுவரை எமக்களித்தே
எங்கு சென்று மறைந்தாயோ எங்கள் தாயே
கல்வியில் நன்றாய் உயர்த்தி வைத்தே
ஏற்றம் கண்டு அகமகிழ்ந்திருந்தாயே
எம்மை கண்டால் பனிபோல் உருகி
நெகிழ்ந்து மனம் குளிர்ந்திடுவாயே
நோயேதுமின்றி மறைந்து போனாயே

அமைதியாய் பேசும் உம் சுபாவம்
எம்மிடமும் வருமோ அம்மா
அறுசுவை உணவும் சொதியும்
எம் நாவுக்கு அமுதமாய் இருக்குமம்மா
தாகம் பசி தீர்க்கும் கற்பக தருவே
இருக்கும் வரை உணவளித்தாயம்மா
முதுமையில் இயலாமை கண்டும்
முடிந்தவரை ஓடிவருவாயம்மா

ஒவ்வொருவரையும் தெளிவாய்
விசாரித்து நலம் அறிவாயே
இறையருள் தேடி வந்ததாலா?
மார்கழித் திங்களில் மறைந்துபோனாய்
இல்லறம் சிறக்க உழைத்து உழைத்து
ஓய்வெடுத்த விதம் இதுதானா?
தொலைந்த முகத்தைத் தேடுகின்றோம்
இழந்த நாளை நினைவு கூருகின்றோம்.

அன்பு மகன்மார்
அரியநாயகம்
சண்முக சுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே இனிக்காண்போம் . . .

கிராமிய வாழ்வை சொல்லிச்சொல்லி
அன்புச் சிறகில் வைத்தே எம்மை
பக்குவமாய்ப் பூட்டி வைத்தாயே
அன்பையும் பண்பையும் ஊட்டி
அறிவாலயம் நன்றாய்ச் சேர்த்தே
வளமாக வாழ்வுதர கல்விதந்தாயே
மக்களை மகிழ்வுடன் மணமுடித்து
மங்களமாய் எம்மை வாழ வைத்தாய்

உறவை மதிக்கும் பண்பும்
உபசாரம் செய்யும் முறையும்
இறுதிக்காலம் வரை உம்மோடு
இனிதாய் எடுத்துச் சென்றாயே
பேரக்குழந்தைகளை சிறுகுழந்தையாய்
அன்போடே அணைத்தெடுப்பாயே
தெய்வ சிந்தனையில் தினமிருந்தே
இறையருள் தேடி காத்துநின்றாயே

கூட்டுக்குடும்பமாய் வாழ்ந்தகாலம்
மறக்க முடியவில்லையே தாயே
திருமலை வந்தால் ஓடியோடி
மக்களைக் கண்டு மகிழ்வாயே
பிடிக்காத விடயத்தை புறக்கணித்தே
மௌனமாய் நின்று அடம்பிடிப்பாயே
ஊரெல்லாம் கூடி அழுதுபுலம்ப
எங்கு சென்று மறைந்தாயோ அன்புத்தாயே

அன்பு மகள்மார்
சமயேஸ்வரி
கமலாதேவி
விஜயலெட்சுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் பிறப்பொன்று இருந்தால்

மருமக்களாய் வாய்த்த காலம்முதல்
தாயாகவே என்றும் கண்டோம்
குடும்ப உறவைப் பேணியே
மாமியாய் நின்று மரியாதை செய்வீர்
அளவான பேச்சு அன்பான உபசரிப்பு
அன்பு காட்டுவதில் குறையேதுமில்லை
மக்களைப் போலவே எம்மை
தினம் தினம் பாதுகாத்தீர்

மரணநாளை மறக்கமுடியவில்லை
மௌனமாய் அடங்கிய மாயமென்ன
பேரக்குழந்தைகள், பூட்டக்குழந்தைகள்
கண்ட பொழுதில் அடைகின்ற ஆனந்தம்
கண்கொள்ளாகாட்சியாய் விரிந்து செல்லும்
சிட்டுக்குருவிகள் போல் நிழல் தேடி
தம்பலகாமம் ஓடிவருவோம்
கூடிழந்த பறவையாய்த் தவிக்கின்றோம்
காலம் ஒன்று கனிந்து வந்தால்
மீண்டும் நாளை மருமக்கள் ஆவோமா

அன்பு மருமக்கள்
திலகரெட்ணம்
வில்வராசா
பத்மலோஜினி
மஞ்சுளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரன், பேத்தி புலம்பல் . . .

குடும்பத்தின் ஆலமராய் கிளைகள்
பல விட்டு விருட்சமாய் நின்றாயே
மின்னல் விழுந்து நொடிப்பொழுதில்
பட்ட மரமாய் பட்டுப்போனாயே

பொட்டின்றி பூவின்றி ஒன்றை மரமாய்
நின்றாலும் பெற்ற மக்களை பிணியின்றி
பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி பயிலவிட்டு
பட்டதாரியாக்கி அழகுபார்த்தாய்

அமைதியாய் பேசும் உன் சுபாவம்
எம்மிடமும் வருமோ அம்மம்மா
இறைவனின் பேரருளாய் உனக்கு
பேரன், பேரத்தியாய் வந்துதித்து பாக்கியம் பெற்றோம்

வார இறுதியில் உன் முகம் பார்த்து
உன் கையில் ருசியான உணவருந்த
இனி எங்கு அம்மம்மா நாம் போவோம்
தவிக்க விட்டு தனியாய் போனாயே

முதுமையில் இயலாமை கண்டும்
முடிந்தவரை ஓடிவருவாய் அப்பம்மா
வைகறையில் நீசெய்யும் சமையல் எனக்கு
தெவிட்டாத தீஞ்சுவையாய் இருக்குமம்மம்மா

எம்மை தூக்கி வளர்த்தவள் நீங்கள் உங்களை
இயலாமையில் படியில் தூக்கி செல்வோம்
பெயரில் மட்டுமன்றி பவளம் போல்
பார்த்துக் கொண்டாயே அம்மம்மா

உன்னிழப்பு எமக்கு பேரிழப்புத்தான்
இருந்தாலும் இறைவனடியில் இளைப்பாற
எம் உள்ளம் உருகி பிரார்த்திக்கின்றோம்
உன் ஆத்மா சாந்தியடையட்டும் ஓம் சாந்தி...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூட்டப்பிள்ளைகளின் கண்ணீர்த்துளிகள்...

அன்பின் உறைவிடமாய் எங்கள்
உயிருடன் கலந்திருந்த தாயே
இன்னமுதளித்தே இனியமொழிபேசி
எளிமையின் வடிவமாய் வாழ்ந்தாயே

அக்கு உக்கு என்ற அகர உகரத்தை சொல்லி
அறுத்துறுத்து பேச வழிவகுத்தாயே
நீ எமை விட்டுப் பிரிந்து சென்றதால்
துடுப்பிழந்த ஓடமாய்த் தவிக்கின்றோம்

உறவுகளை இனிய உயிராக
மதித்து வாழ்ந்தாயே
உறவுகளைப் பரிதவிக்க விட்டு
இறைவனடி சென்றதேனோ

**பூட்டப்பிள்ளைகள்**

**டிவ்யலக்ஷன், விகாசினி, டிவ்யஹர்ஸன்,**

**மகிஷாயினி, ஹரிணி**

## பெறாமக்கள் புலம்பல்

பெரியம்மா பெரியம்மா என்று அழைக்க
இனி யாரிருக்கின்றார்கள் எமக்கு
சிறுவயதிலிருந்து இற்றைவரை எமக்கு
விருந்தளித்தல் இறக்கும்வரை ஓயவில்லை பெரியம்மா
இன்ப துன்பங்கள் எமக்கு ஏற்படும் வேளை
இருப்புக் கொள்ளாமல் ஓடிவருவாய் பெரியம்மா
அத்தானுடன் கூடவே சுவர்க்கம் சென்றாயே
உன்பாத கமலங்களை வணங்குகின்றோம் பெரியம்மா

**தெய்வானைபிள்ளையின்**

**மக்கள்**

## தேற்றம்...

முன்செய்த பாவ புண்ணியங்கள் சாருமுறைப்படியே
மண்ணும் உலகில் பிறந்தே பிறப்பரிய மறைமொழியே
பொன்னாக்க வேண்டி சிதம்பரம் அமர பதமானார்
பின்னோக்கிலா மறமென்னாமலிந்தின்பம் பெற்றுய்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்சாவழி

கணபதிப்பிள்ளை + சிதம்பரம்

- சமயேஸ்வரி + திலகரெட்ணம் → கோகிலா → துஷ்யந்தன் → தர்சினி → ரேணுகாந்தன்
- கமலாதேவி + வில்வராசா → பிரசாந்தன் → சிவசாந்தன் → தட்சாயினி
- அரியநாயகம் + பத்மலோஜினி → ரம்யா → சரண்யா → டிலக்ஷன்
- சண்முகசுந்தரம் + மஞ்சுளா → பவித்ரா → சுவேதிகா
- விஜயலட்சுமி + தனபாலராசா → பவளேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் இதய தெய்வம் அமரர்.சிதம்பரம் கணபதிப்பிள்ளை அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டவுடன் எமது இல்லத்திற்கு ஓடோடி வந்து எம்முடன் இணைந்து ஆறுதல் கூறியவர்களிற்கும், வெளிநாடு, உள்நாட்டிலிருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிச் செய்தி அனுப்பியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி மடல் அளித்தவர்களுக்கும், மலர் வளையம், மலர்மாலை சாத்தியவர்களுக்கும், உணவளித்த உறவுகளுக்கும், நண்பர்களுக்கும் மற்றும் மரணக்கிரியைகளைச் செவ்வனே ஆற்றி, எமது தாயின் ஆத்ம சாந்திக்காக அனைத்துக் கிரியைகளையும் சிறப்புறச் செய்த பிராமணோத்தமர்களுக்கும் உதவியாளர்களுக்கும், ஓதுவார்க்கும் இந்நூலை ஆக்க உதவியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உடல் உளரீதியில் பல்வேறு உதவிகளை வழங்கிய அன்பு உள்ளங்களுக்கும் உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


என்றும் அன்பு நிறை
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை நீ இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைதிருந்தாய், அது வீணாவதற்கு ?
எதை நீ எடுத்து கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள்,
அது வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org